Transport for NSW

# சாலைப் பாதுகாப்பு

## உங்கள் குழந்தையின் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள்

உங்கள் குழந்தையின் கவனம் எளிதில் திசைதிருப்பப்படலாம் மற்றும் ஓட்டுநர்களால் பார்க்க முடியாத அளவுக்கு அவர்கள் சிறியதாக இருக்கலாம். ஆபத்துகளைக் கணிக்க அல்லது அடையாளம் காண உதவும் திறன்களை அவர்கள் இன்னும் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள், மேலும் மனக்கிளர்ச்சியுடன் செயல்படலாம்.

வெளியில் செல்லும்போது உங்கள் பிள்ளையின் பாதுகாப்பிற்கு வயது வந்தவர் எப்போதும் பொறுப்பேற்க வேண்டும்.

நடைபாதையில் பாதுகாப்பான நடத்தை பற்றி உங்கள் குழந்தையுடன் பேசுங்கள். இது விளையாடுவதற்கு பாதுகாப்பான இடமில்லை , ஏனெனில் இது சாலைக்கு அருகில் உள்ளது மற்றும் வாகனங்கள் வண்டிப்பாதைக்குள் நுழையும் அல்லது வெளியேறும்.

குறைந்தது 8 வயது ஆகும் வரை, அவர்களின் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள்:

- நடைபாதையில்
- கார் நிறுத்துமிடத்தில்
- சாலையைக் கடக்கும் போது.

குறைந்தது 10 வயது வரை, உங்கள் குழந்தையை மிக நெருக்கமாகக் கண்காணிக்கவும், சாலையைக் கடக்கும்போது அவர்களின் கையைப் பிடித்துக் கொள்ளவும்.

உங்களால் உங்கள் குழந்தையுடன் இருக்க முடியாவிட்டால், மற்றொரு நம்பகமான வயது வந்தவரை அவர்களுடன் அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யுங்கள்.

பள்ளி நாள் முடிவில், உங்கள் குழந்தை உற்சாகமாகவோ, கவனச்சிதறலாகவோ அல்லது சோர்வாகவோ இருக்கலாம், மேலும் அவர்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதில் கவனம் செலுத்தாமல் இருக்கலாம். பள்ளியின் வாசலில் உங்கள் குழந்தையைச் சந்திப்பதன் மூலம் அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவுங்கள். சாலையின் குறுக்கே அவர்களை வருமாறு அழைக்க வேண்டாம்.

**குழந்தைகள் உங்களிடமிருந்து பாதுகாப்பான சாலைப் பயணப் பழக்கங்களைக் கற்றுக்கொள்கிறார்கள், மேலும் அவர்கள் தனியாகப் பயணம் செய்யும் அளவுக்கு வளரும்போது அவற்றைக் கடைப்பிடிப்பார்கள்.**

சாலைச் சூழலில் குழந்தைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு **safetytown.com.au** இல் உள்ள குடும்பங்கள் (families) என்ற பகுதியைப் பார்வையிடவும்




### மழலையர் பள்ளி முதல் ஆண்டு 2 வரை உங்களுடைய குழந்தையுடன் பகிர வேண்டிய முக்கிய சாலை பாதுகாப்புத் தகவல்கள்

- பின்வரும் சூழ்நிலைகளில் ஒரு வயது வந்தவரின் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள்:
  - நீங்கள் சாலையைக் கடக்கும்போது
  - நீங்கள் நடைபாதையில் இருக்கும்போது
  - நீங்கள் கார் நிறுத்துமிடத்தில் இருக்கும்போது

### 3 முதல் 6 ஆண்டுகளில் உங்கள் குழந்தையுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய முக்கிய சாலை பாதுகாப்புத் தகவல்கள்

- நீங்கள் சாலையைக் கடக்கும்போது வயது வந்தவரின் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள் (குறைந்தது 10 வரை)
- சாலையைக் கடக்க பாதுகாப்பான இடத்தைப் பயன்படுத்துங்கள்
- **நிறுத்துங்கள்! பாருங்கள்! கேளுங்கள்!** சிந்தியுங்கள்!ஒவ்வொரு முறையும் நீங்கள் சாலையைக் கடக்கும்போது, பாதுகாப்பாக கடந்து செல்லும் வரை சரிபார்க்கவும்

தனித்துவக் குறியீடு 45095353 ஜூன் 2024 © NSW க்கான போக்குவரத்து

NSW GOVERNMENT

NSW சாலைகளில் பல உயிர்கள் பலியாகியுள்ளன.
**நமது இலக்கு பூச்சியம் ஆகும்.**

TOWARDS ZERO